தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 11, பார்த்திப—திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 செப்டம்பர் 27, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்"

வினை செய்வதற்குரிய வழிவகைகள் எல்லாம் குறைவில்லாதபடி அவற்றை எண்ணிப் பார்த்து, இடத்தொடு பொருந்த குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்தால், அவ்வினை வெற்றி பெற அஞ்சாமையைத் தவிர அவருக்கு வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 61, திரு. டி.பி. பொன்னம்பலம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

61—

சுற்று வட்டச் சாலை

*** 30272—திரு. டி.பி. பொன்னம்பலம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மேலூர் சாலையிலிருந்து திண்டுக்கல் சாலை வரை சுற்று வட்டச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இரண்டாம் கட்டச் சுற்றுச் சாலையானது, மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு அருகில் பிரிந்து, மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இணையும் வகையில் அமைக்கக் கோரப்பட்டுள்ளது. தற்போது இரண்டாம் கட்டமாக ஊத்தங்குடி–சமயநல்லூரை இணைக்கும் வட்டச் சாலை அமைப்பதற்கான திட்டம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இரண்டாவது தலைநகரமாம் மதுரையில் சமயநல்லூர் தொகுதி அமைந்துள்ளது. சமயநல்லூர் தொகுதியில் திருச்சி–மெட்ராஸ்–மேலூர் வழியாகவும், சேலம்–தருமபுரி–திண்டுக்கல் வழியாகவும் வந்து இணையும் சாலையாகும் இது. அதனால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உண்டாகிறது. ஆகவே, சுற்று வட்டச் சாலையை அமைக்கும் கோரிக்கை பல நாட்களாக வைக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அடுத்த ஆண்டாவது சுற்று வட்டச் சாலையை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சுற்று வட்டச் சாலை அமைக்கும் பணி மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பரிசீலனையில் தற்போது இருக்கின்றது. அந்தச் சாலைப் பணியை விரைந்து எடுப்பதற்கு மீண்டும் வலியுறுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி.பி. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமல் கொடுக்கும் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் இந்தச் சாலையை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்ததற்கு அமைச்சர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மாவட்டத்தின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சாமி.

2005 செப்டம்பர் 27]

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சாலை என்பது மிகவும் அவசியமாக இருப்பதால், வளர்ந்து வரும் மதுரையில் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல்வேறு சுற்றுச் சாலைகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. மதுரையிலிருந்து அழகர்கோவில் வரை 10½ கோடி ரூபாய் செலவில் சுற்றுச் சாலை அமைத்திருக்கிறார்கள். ஆனால், அழகர்கோவிலிலிருந்து மேலூர் வரைக்கும் அதை இணைத்தால்தான், சென்னையிலிருந்து வருகிற பக்தர்களும் மற்ற பயணிகளும் மேலூர் வழியாக அழகர்கோவில் போய், மதுரைக்குப் போவதற்கு வசதியாக இருக்கும்.

அதேபோல, ஒத்தக்கடையிலிருந்து திருவாதவூர் வரை 5½ கோடி ரூபாய் செலவிலே சுற்றுச் சாலை அமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள் அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில். அதை திருவாதவூர் வரை நிறுத்தினால் மட்டும் போதாது. மேலூரிலே வந்து இணைத்தால்தான், சுற்றுப்புறம் போவதற்கும், தேசிய நெடுஞ்சாலையில் ஏதாவது விபத்துகள்–accidents-ஆகிற நேரங்களிலே, மேலூர் வழியாக திருவாதவூர் சென்று மதுரை போவதற்கும், மேலூர் வழியாக அழகர்கோவில் போய் மதுரை போவதற்கும் அந்தச் சுற்றுச் சாலையில் நல்லமுறையில் போக்குவரத்து அதிகரிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதெல்லாம், பல கோடி ரூபாய்க்கு நீங்கள் சாலை போட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். இந்தக் குறையையும் நீக்கி அகலப்படுத்தி புதிய சாலையாக அமைத்துக் கொடுத்தால், போக்குவரத்து நெரிசலின்றி மதுரைக்கு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகையால், அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களில் வாகன நெரிசலைத் தவிர்ப்பதற்காக வட்டச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஒரு நகருக்குள் செல்லாமல், வேறு நகருக்குச் செல்லவேண்டிய வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து, வட்டப் பாதையினால் ஆகும் செலவினத்தைவிட வாகனங்களின் எரிபொருள் சேமிப்பு, நேரக் குறைவு ஆகியவற்றால் ஏற்படக்கூடிய பயன் கூடுதலாக இருப்பின், வட்டச் சாலைகள் அமைக்கத் திட்டமிடப்படுகிறது. மாண்புமிகு மேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சாமி அவர்கள் கோருகின்ற அந்தச் சாலை இந்த வரையறைக்குள் அமைந்தால், அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

TRUTH ALONE TRIUMPHS

[2005 செப்டம்பர் 27

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லா. சந்தானம்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, பல்வேறு வட்டச் சாலைகள் மதுரை நகரைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தேசிய நெடுஞ்சாலையாகிய குமுளி–இராமேஸ்வரம் சாலையில் மதுரைக்கு மேல்புறம் இருக்கின்ற விராட்டிபத்து, அச்சம்பத்து என்கின்ற ஊர்களுக்குள் செல்கின்றபோது, அந்தச் சாலை மிகவும் குறுகலாக இருக்கின்ற காரணத்தினால், அங்கு பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. அதோடு போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. அந்தப் பகுதியை மாற்றியமைத்து, சுற்றுச் சாலை அமைத்து மேற்குப் பகுதியிலே போக்குவரத்தை சீர் செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படி இல்லையென்றாலும், அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சுற்று வட்டச்சாலை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *திரு. கே.எஸ். தென்னரசு.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு, மொடக்குறிச்சி, பெருந்துறை தொகுதி வழியாக சேலம், கோவை தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் புறவழிச்சாலைத் திட்டம், கடந்த 4 ஆண்டுகளாக அரசின் ஆய்வில் உள்ளது. மதிப்பீட்டுக் குழு, ஈரோடு மாவட்டத்திற்கு வருகைத் தந்த நேரத்திலேகூட பார்வையிட்டது. 68 கோடி ரூபாயிலே இந்தத் திட்டம் இருப்பதாகக் கூறப்பட்டது. இந்த ஆண்டு ஐம்பதாயிரம் கிலோமீட்டர் தார்ச் சாலைகளைத் தரமான சாலைகளாக அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு, இந்த ஆண்டு*

2005 செப்டம்பர் 27]

இந்த புறவழிச் சாலைத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கின்றது. விரைந்து நடப்பதற்கு வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சேலம் முதல் வாணியம்பாடி வரையிலான சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த சூழ்நிலையை மாற்ற தமிழக அரசு நிதியை ஒதுக்கிக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒதுக்கப்பட்ட இந்த நிதி, டெண்டர் விடப்பட்டு, அங்கொன்றும் இங்கொன்றுமாக பணி துவங்கப்பட்டது. ஆனால் பணி இதுவரை நிறைவேறவில்லை. தமிழகத்தில் இப்படி இந்தச் சாலை டெண்டர் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட சூழ்நிலையில் அநேகமாக இதுமட்டும் இதுவரை முடிக்காமல் குண்டும் குழியுமாக இருக்கிறது. அதனால் போக்குவரத்து கடுமையான முறையிலே பாதித்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக டெண்டர் விடப்பட்ட இந்தச் சாலைப் பணி இன்னும்கூட பணி முடிக்கப்படாமல் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக இந்தப் பணியை முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தச் சாலைப் பணியை விரைந்து முடிப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 62, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.